ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2492- 2026 ජූනි මස 05 වැනි සිකුරාදා - 2026.06.05

2492ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 05ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (II ஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

	பக்கம்		பக்கம்
கேள்விப்பத்திர அறிவித்தல்கள்	-	உத்தியோகத்தொடர்பற்ற அறிவித்தல்கள்	897
கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள்	-	அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்	-
பொருட்கள் விற்பனவும் பிறவும்	-	ஏல விற்பனைகள்	898
ஆய விற்பனையும் குத்தகையும்	892	நானாவித அறிவித்தல்கள்	-

கவனிக்க.- இலங்கை ஊடக உயர்தொழிலர்களின் பட்டயம்பெற்ற நிறுவகம் சட்டமூலம் 20026.06.05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறை நுரப்பியாக வெளியிடப்படுகிறது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூன் மாதம் 26ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூன் மாதம் 12ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

பிரசன்ன ஜயரத்ன,
அரசாங்க அமுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
இவ்வர்த்தமானியை www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

891 - B 82798- 417(2026/06)

இசையாக்கங்களை பொது மக்கள் முன்னிலையில் நிகழ்ச்சியாக வழங்குவதற்கும் மக்களிற்கு ஒலி/ஒளிபரப்புவதற்குமான அனுமதி பத்திர கட்டண விதிமுறை

பாடலாசிரியர்கள் மற்றும் இசையமைப்பாளர்கள் சார்பில் இசையாக்கங்களை பொது மக்கள் முன்னிலையில் நிகழ்ச்சியாக வழங்குவதற்கும் மக்களிற்கு ஒலி/ஒளிபரப்புவதற்குமான உரிமைகளை நிர்வகிக்கும் மற்றும் அனுமதி வழங்கும் கடமைகள் இலங்கை தேசிய புலமைச்சொத்துக்கள்அலுவலகத்தின் (NIPO) கீழ் முறையாகப் பதிவுசெய்யப்பட்ட கூட்டு நிர்வாக நிறுவனமான இலங்கை படைப்பாளர்கள் மற்றும் வெளியீட்டாளர்களின் சங்கத்திடம் (ACPOSL), ஒப்படைக்கப்பட்டுள்ளன.

2003-ஆம் ஆண்டு 36-ஆம் இலக்க அறிவுசார் சொத்துரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, உலக புலமைச்சொத்துக்கள் அமைப்பாலும் (WIPO) சர்வேதச பாடலாசிரியர்கள் மற்றும் இசையமைப்பாளர்கள் சங்கங்களின் கூட்டமைப்பாலும் அங்கீகரிக்கப்படும், பதிப்புரிமைகளை கூட்டு நிருவகித்தல் பற்றிய சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு இணங்க, இலங்கைக்குள் இசையாக்கங்களை நிகழ்ச்சியாக வழங்கும் போதும் பொதுமக்களிடம் ஒலி/ஒளிபரப்பும்போதும் பொருந்தும் பின்வரும் கட்டண முறை இலங்கை படைப்பாளர்கள் மற்றும் வெளியீட்டாளர் சங்கத்தால் இதன் மூலம் அங்கீகரிக்கப்படுகிறது.

இக்கட்டண முறையை தாபிப்பதன் முக்கிய நோக்கம், குறித்த உரிமையாளர்களுக்கான நியாயமான ஊதியத்தை உறுதிப்படுத்தலாகும் அதே வேளை இசைப் பயனாளர்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது முறையானதும் வெளிப்படையானதும் பாகுபாடற்றதுமான சட்டகமொன்றை உறுவாக்குவதும் ஆகும்.

1. வரைவிலக்கனங்கள் மற்றும் விளக்கங்கள்

i. **ACPOSL** – இசையாக்கங்கள் தொடர்பான உரிமைகளை நிர்வகிக்கும் கூட்டு முகாமைத்துவ அமைப்பாகிய இலங்கை படைப்பாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் சங்கத்தைக் குறிக்கிறது.

ii. இசையாக்கம் - என்பது, தொடர்புடைய இலக்கியப் படைப்புகள் உட்பட, பாடல் வரிகளுள்ள அல்லது வரிகளற்ற முதல் இசை ஆக்கத்தை குறிக்கிறது.

iii. **இசையாக்கங்களின் தொகுப்பு** - என்பது, ACPOSL இன் உறுப்பினர்களாலோ இணைந்த உரிமைதாரர்களாலோ உரிமைகள் நிர்வகிக்க அதிகாரமளிக்கப்பட்ட இசையாக்கங்களை குறிக்கிறது.

iv. **நிகழ்ச்சியாக வழங்குதல்** – என்பது, பொது மக்களால் பிரவேசிக்ககூடிய எந்தவொருவிடத்திலும் இசையாக்கமொன்றினை வழங்கக்கூடிய எந்தவொரு முறையையும் குறிக்கிறது.

v. **பொதுமக்களுக்கு ஒலி/ஒளிபரப்புதல்** - என்பது, இசையாக்கமொன்றினை ஒலிபரப்புதல், ஒளிபரப்புதல், பரிமாற்றம்(ஸ்ட்ரீமிங்) அல்லது வேறு இளத்திரனியல் தொடர்பாடல் முறைமைகள் உட்பட, ஏதேனும் ஒரு வழி மூலம் பொது மக்களுக்கு வழங்குவதை குறிக்கிறது.

vi. **பயனாளர்** - என்பது, இந்தக் கட்டணச் சட்டகத்தின் கீழ் அனுமதிபத்திரமொன்றை பெற வேண்டிய முறையில் இசையாக்கங்களை உபயோகப்படுத்தும் தனிநபரொருவர், அமைப்பு அல்லது நிறுவனமொன்றைக் குறிக்கும்.

vii. **அனுமதிப்பத்திரம்** – என்பது, குறிப்பிட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் இசையாக்கங்களைப் பயன்படுத்துவதற்காக ACPOSL இனால் வழங்கப்படும் அனுமதியை குறிக்கிறது.

viii. **வளாகம்** என்பது, இசையாக்கங்களைப் பயன்படுத்தப்படும் அல்லது பொதுமக்கக்கு வழங்கப்படும் எந்தவொரு இடத்தையோ நிறுவனத்தையோ குறிக்கிறது.

ix. **நிகழ்ச்சி** என்பது, நேரடியாகவோ ஒலிப்பதிவுகள் மூலமாகவோ, இசையாக்கங்களை நிகழ்ச்சியாக வழங்கும் அல்லது ஒலி/ ஒளிபரப்பும் எந்தவொரு சந்தர்ப்பத்தையும் குறிக்கிறது.

x. **இசைக் கச்சேரி** – என்பது, இசையை முக்கிய நோக்காகக் கொண்டதும், அவ்வாறான நிகழ்ச்சிகளை கேட்பதற்காக அல்லது பார்ப்பதற்காகவே வருகின்ற இரசிகர்களுக்கு நேரடியாக இசையாக்கங்களை வழங்குகின்றதுமான ஏற்பாடுசெய்யப்பட்ட நேரடி நிகழ்ச்சியாகும்.

xi. **நேரடி இசை நிகழ்ச்சி** - (கச்சேரியல்லாத) - என்பது, பொழுதுபோக்கின் பங்காக நேரடியாக இசையாக்கங்களை நிகழ்ச்சியாக வழங்கும் அல்லது பொது மக்களுக்கு ஒலி/ஒளிபரப்பும், இருப்பினும் இக்கட்டண முறையின் கீழ் 'இசைக் கச்சேரி' என வகைப்படுத்த இயலாத எவ்வித நிகழ்ச்சியையும் குறிக்கும்.

xii. **DJ இசை நிகழ்ச்சி** - என்பது, இசைத்தட்டு இயக்குனர் ஒருவர் அல்லது அதுபோன்ற கலைஞர் ஒருவரால், பதிவுசெய்யப்பட்ட இசையை பொழுதுபோக்கின் முக்கிய வடிவமாகக் கொண்டு நிகழ்த்தப்படும் அல்லது பொது மக்களுக்கு ஒலி/ஒளிபரப்பப்படும் எந்தவொரு நிகழ்வையும் குறிக்கும்.

xiii. **கொள்ளளவு**,- என்பது, நிகழ்ச்சியொன்றில் பங்கேற்க அனுமதிக்கப்பட்ட அல்லது எதிர்பார்க்கப்படும் அல்லது வளாகமொன்றிற்குள் கூடியிருக்கக் கூடிய அதிகபட்ச மக்கள் தொகையைக் குறிக்கும்.

xiv. **வணிகப் பயன்பாடு** - என்பது, வருமானத்தை ஈட்டுவதை அல்லது வணிக இலாபத்தை பெறுவதை நோக்கமாகக்கொண்ட வணிக, வர்த்தக அல்லது வேறு செயற்பாட்டொன்றிற்காக இசையாக்கங்களை பயன்படுத்துவதை குறிக்கிறது.

xv. **வணிகமல்லாத பயன்பாடு** - என்பது, இலாபத்தை பெறும் நோக்கமின்றி புண்ணிய, கல்வி, சமய அல்லது சமூக சேவை நோக்கங்களுக்காக இசையாக்கங்களை பயன்படுத்துவதை குறிக்கிறது,

xvi. **மாநகர சபை ஆளுகைப் பிரதேசம்** என்பது, மாநகர சபைகளால் நிர்வாக்கிக்கப்படும் பிரதேசங்களைக் குறிக்கும்.

xvii. **நகர சபை ஆளுகைப் பிரதேசம்** – என்பது, நகர சபைகளால் நிர்வாகிக்கப்படும் பிரதேசங்களைக் குறிக்கும்.

2. **அனுமதிபத்திரத்தின் பொதுவான நிபந்தனைகள்**

i. செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக்கொள்ளாமல், ACPOSL ஆல் நிர்வகிக்கப்படும் இசைத் தொகுப்பில் உள்ள எந்தவொரு இசையாக்கத்தையும் எந்தவொரு நபரோ நிறுவனமோ நிகழ்ச்சியாக வழங்கவோ பொதுமக்களுக்கு ஒலி/ஒளிபரப்பவோ கூடாது.

ii. ACPOSL-ஆல் வழங்கப்டும் அனுமதி பத்திரமொன்றின் மூலம் அனுமதியளிக்கப்படுவது, குறித்த கட்டணச் சட்டகத்தில்

xviii. **பிரதேச சபை ஆளுகைப் பிரதேசம்** – என்பது, பிரதேச சபைகளால் நிர்வாகிக்கப்படும் பிரதேசங்களைக் குறிக்கும்.

குறிப்பிடப்பட்டுள்ள விடயபரப்பு, வகை மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கி இசையாக்கங்களை பயன்படுத்துவதற்காக மட்டுமே.
இந்த அனுமதி பத்திரம், ACPOSL-ஆல் நிர்வகிக்கப்படும் இசையாக்கங்களின் உரிமைகளை மட்டுமே உள்ளடக்குகின்றது .

பின்வருவன உள்ளடக்கப்படவில்லை,

- பாடகரின் மற்றும் இசைக் கலைஞர்களின் உரிமைகள்
- ஒலிப்பதிவுகள் தயாரிப்பாளர்களின் உரிமைகள்
- ஒத்திசைவு அல்லது தயாரிப்பு உரிமைகள்

iii. இதற்காக சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடமிருந்து தனி அனுமதியை பெறுவது தேவைப்படலாம்.

iv. இசையாக்கங்களின் சில பயன்பாடுகள் ACPOSL-ஆல் நிர்வகிக்கப்படாத உரிமைகளுள் அடங்கலாம். அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயனாளர்கள், சம்பந்தப்பட்ட உரிமையாளர்களிடம் தேவையான முழு அனுமதியையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

v. அனுமதிப் பத்திரங்களை வேறு தரப்புகளிடம் கையளிக்க முடியாது. அவை வழங்கப்பட்ட குறிப்பிட்ட வளாகத்திற்கு, சந்தர்ப்பத்திற்கு அல்லது பயனாளருக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

vi. வேறுவிதமாகக் குறிப்பிடப்பட்டாலன்றி :

1. வருடாந்த அனுமதி பத்திரங்கள் ஒரு (1) வருட காலத்திற்கு மட்டுமே செல்லுபடியாகும்.

2. நிகழ்ச்சிகளுக்கு அல்லது சந்தர்ப்பங்களுக்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரங்கள் குறித்த நிகழ்ச்சிக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

vii. ACPOSL உடன் வேறுவிதமாக எழுத்துமூல ஒப்பந்தமொன்று இல்லையெனில் அனைத்து அனுமதிப்பத்திர கட்டணங்களும் முன்கூட்டியே செலுத்தப்பட வேண்டும்.

viii. இந்தக் கட்டண முறை, ACPOSL-ஆல் நிர்வகிக்கப்படும் இசைத்தொகுப்பொன்றிற்குள் உள்ள இசையாக்கங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

ix. ஒரு இசையாக்கத்தின் உரிமைகளின் ஒரு பகுதி மட்டும் ACPOSL ஆல் நிர்வகிக்கப்படும் பட்சத்தில், பொருந்தக்கூடிய அனுமதிப்பத்திரக் கட்டணமானது, ACPOSL நிர்வகிக்கும் உரிமைகளின் பங்கின் அடிப்படையிலான விகிதாசாரத்தின்படி கணக்கிடப்படல் வேண்டும்.

x. பொருந்தக்கூடிய கட்டண வகையானது, இசையின் தன்மை மற்றும் பயன்பாட்டின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஏதேனும் ஒரு பயன்பாடு பல வகைகளின் கீழ் வரும் பட்சத்தில், மிக உசிதமான கட்டண வகையை தெரிவுசெய்தல் வேண்டும். இந்தத் முறையின் கீழான கட்டணங்களை தீர்மானிக்கும்போது, வளாகம் அல்லது சந்தர்ப்பம் இடம்பெறும், ஆளுகைப் பிரதேசம் கவனத்திற் கொள்ளப்படும்.

இதற்காக, ஆளுகைப் பிரதேசங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:

- மாநகர சபை ஆளுகைப் பிரதேசங்கள்
- நகர சபை ஆளுகைப் பிரதேசங்கள்
- பிரதேச சபை ஆளுகைப் பிரதேசங்கள்

xi. பொருந்தக்கூடிய வகைப்பாடு, வளாகம் அல்லது நிகழ்வு இடம்பெறும் இடத்தை நிர்வகிக்கும் உத்தியோகபூர்வ உள்ளூராட்சி அமைப்பின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். ஏதேனும் தெளிவின்மை ஏற்படும்போது, பொருந்தக்கூடிய வகைப்பாட்டைத் தீர்மானிக்கும் உரிமை ACPOSL வசமுள்ளது.

xii. எந்தவொரு பயன்பாட்டினதும் வகைப்படுத்தல், ஏதேனுமொரு நிகழ்ச்சியை இசைக் கச்சேரியா இசை நிகழ்ச்சியா என்பது மற்றும் அதற்குரிய கட்டண வகையை தீர்மானிக்கும் உரிமை ACPOSL வசமுள்ளது.

xiii. அனுமதி பத்திரதாரர்கள் ACPOSL-ஆல் பரிந்துரைக்கப்படும் வடிவத்திற்கேற்ப பாடல் பட்டியல்கள், நிகழ்ச்சித் தொடர் அல்லது பயன்படுத்தலுக்கான பதிவுகள் ஆகியன சமர்ப்பிப்பதற்கு இணங்கல் வேண்டும்.

xiv. இசையாக்கங்களின் பயன்பாட்டை உறுதிப்படுத்துவதற்கும் நிபந்தனைகளுக்கு இணங்கி செயற்படுவதை பார்வையிடுவதற்கும், குறித்த வளாகங்களை அல்லது நிகழ்ச்சிகளை பரிசோதிக்கும் உரிமை ACPOSL- வசமுள்ளது.

xv. அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ள தவறுதல் அல்லது நிபந்தனைகளுக்கு இணங்கத் தவறுதல், குறித்த அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துவதற்கோ இரத்துச் செய்வதற்கோ அல்லது நிகழும் காலத்தில் அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் நடவடிக்கையெடுக்கவோ காரணமாகலாம்.

xvi. இந்தக் கட்டணப் பட்டியலைத் திருத்தும், புதிய அனுமதிப்பத்திர மாதிரிகளை அறிமுகப்படுத்தும் மற்றும் கட்டண விகிதங்களை மாற்றியமைக்கும் உரிமைகளை ACPOSL தன்வசம் தக்கவைத்துக்கொள்கிறது.

xvii. எந்தவொரு பயன்பாடும், நிகழ்ச்சி அல்லது வளாகமும் இந்தக் கட்டண விதிமுறையின்படி வகைப்படுத்தும் இறுதி முடிவினையெடுக்கும் அதிகாரம் ACPOSL-வசமுள்ளது.
xviii. ஏதேனும் தெளிவின்மை ஏற்பட்டால், அதற்குரிய விளக்கத்தைத் கொண்டுள்ள சட்டத்திற்கு இணங்குதல் வேண்டும்.

3. **வணிக வளாகங்கள் (பின்னணி இசை)**

3.1 **பொருந்தும் நிறுவனங்கள்**

இந்த வகையானது வணிகச் சூழல்களில் இசையாக்கங்களை பின்னணி அல்லது சுற்றுப்புற இசையாகப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களுக்குப் பொருந்தும்.

பின்வருவன இதனுள் அடங்கும், (இவை மட்டும் அடங்குமென பொருள்படாது.)

- பல்பொருள் அங்காடிகள் மற்றும் சில்லறை கடைகள்
- வர்த்தகத் தொகுதிகள், ஆர்கேட்கள் மற்றும் ப்ளாஸாக்கள்
- வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள்
- அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் வர்த்தகத் தொகுதிகள்
- காட்சியறைகள் மற்றும் கண்காட்சி தொகுதிகள்
- திரையரங்கங்கள் (திரைப்படங்கள் காட்சிபடுத்தும் உரிமைகள் தவிர்த்து)

3.2 **அனுமதிப் பத்திரத்தின் விடயப் பரப்பு**

இந்த அனுமதிப் பத்திரமானது பின்வரும் முறைகள் உள்ளடக்கிய போதும் அவற்றுக்கு மட்டம் என வரையறுக்கப்பட்டிராத, இசையாக்கங்களை பின்னணி அல்லது சுற்றுப்புற இசையாக பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமானது.

o வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்பு
o எண்ணிம பரிமாற்றுச் (டிஜிட்டல் ஸ்ட்ரீமிங்) சேவைகள்
o களைஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது பௌதீக ஊடகங்கள்

- இங்கு இசையானது பிரதான ஈர்ப்புக்கருவியாகவோ பொழுதுபோக்கு அம்சமாகவோ அமைதல் கூடாது.

3.3 **பல நிறுவனங்கள் இயங்கும் வளாகங்கள்**

ஒரு வளாகத்தில், வணிக தொகுதிகள், வர்த்தக தொகுதிகள் அல்லது அதேபோன்ற நிறுவனங்கள் உட்பட, பல சுயாதீனமான வணிகங்கள் அல்லது பிரிவுகள் இருந்தால், அந்த வளாகத்தின் பொதுவான பகுதிகளுக்காக வழங்கப்படும் அனுமதிப் பத்திரமானது அந்த வளாகத்திற்குள் இயங்கும் தனித் தனிப் பிரிவுகள் அல்லது வணிகங்களுக்குப் பொருந்தாது.

அவ்வாறான தனிப் பிரிவுகள் அல்லது வணிக வளாகங்களுக்குள் இடம்பெறும் இசையாக்கங்களைப் பயன்படுத்தல்களுக்கு தனி அனுமதிப் பத்திரமொன்று பெறுதல் தேவைப்படும். அந்த அனுமதிப் பத்திரத்திற்கான கட்டணமானது குறித்த பிரிவின் அல்லது வளாகத்தின் பரப்பளவு உட்பட பொருந்தும் கட்டணச் சட்டத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும்.

3.4 **தனி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் பயன்பாடுகள்**

பின்வரும் பயன்பாடுகள் இந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் உள்ளடக்கப்படவில்லை; என்பதோடு இவற்றிற்கு பொருந்தும் கட்டண வகையின் கீழ் தனி அனுமதிப் பத்திரங்கள் பெறுவது அவசியம்:

- நேரடி இசை நிகழ்ச்சிகள் (இசைக் குழுக்கள், தனிக் கலைஞர்கள் போன்றோர்)
- டிஜே நிகழ்ச்சிகள் அல்லது விசேடமாக ஏற்பாடுசெய்யப்பட்ட இசை நிகழ்ச்சிகள்
- நுழைவுச் சீட்டு வழங்கப்படும் அல்லது அனுசரனை பெற்ற நிகழ்ச்சிகள்
- சிறப்பு நிகழ்ச்சி தயாரிப்புகள் (பருவ அல்லது திருவிழா சந்தர்ப்பங்கள் உட்பட)

3.5 **வணிக வளாக வகைப்பாடு**

வகை	வளாகத்தின் தன்மை
வகை A	வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், அலுவலக கட்டடங்கள் மற்றும் வணிக தொகுதிகள், கண்காட்சி அரங்குகள் மற்றும் கண்காட்சி தொகுதிகள், திரையரங்குகள்
வகை B	வர்த்தகத் தொகுதிகள், ஆர்கேட்கள், பிளாஸாக்கள் மற்றும் இது போன்ற நிறுவனங்கள்
வகை C	பல்பொருள் அங்காடிகள், சில்லறை கடைகள் மற்றும் இது போன்ற வியாபாரங்கள்

3.6 அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் (வருடாந்தம்)

வளாகம்	அளவு (சதுர அடி)	அனுமதிப் பத்திர கட்டணம் (ரூ.)		
		மாநகர சபை பகுதி (ரூ.)	நகர சபை பகுதி (ரூ.)	பிரதேச சபை பகுதி (ரூ.)
வகை A	10,000 க்கு கீழ்	50,000.00	25,000.00	15,000.00
	10,000 க்கு மேல்	100,000.00	50,000.00	25,000.00
வகை B	50,000 க்கு கீழ்	30,000.00	20,000.00	
	50,000-300,000	100,000.00	75,000.00	40,000.00
	300,000 க்கு மேல்	150,000.00	100,000.00	60,000.00
வகை C	2,000 க்கு கீழ்	5,000.00	4,000.00	2,500.00
	2,000 – 5,000	8,000.00	6,500.00	4,000.00
	5,000 – 10,000	25,000.00	15,000.00	6,500.00
	10,000 – 25,000	40,000.00	20,000.00	15,000.00
	25,000 க்கு மேல்	சதுர அடிக்கு ரூ. 2.00	சதுர அடிக்கு ரூ. 1.50	சதுர அடிக்கு ரூ. 1.00

3.7 அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான அடிப்படை

- அனுமதிப் பத்திரமானது தனி ஒரு வளாகத்திற்கு அல்லது இடத்திற்கு பொருந்தும்.
- விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த தரைப் பரப்பளவை சரியாக குறிப்பிடல் வேண்டும்.
- அத்தகைய தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ளும் உரிமை ACPOSL இடம் உள்ளது.

4. உபசரணைச் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள்

4.1 பொருந்தும் நிறுவனங்கள்

இந்த வகையானது கீழ்க்காணும் தங்குமிட வசதிகள் வழங்கும் நிறுவனங்களுக்கு பொருந்தும்:

விடுதிகள் (Hotels)
விருந்தினர் விடுதிகள் (Guest Houses)
சிறு விடுதிகள் (Lodges)
விடுமுறை விடுதிகள் (Holiday Inns)
சுற்றுலா விடுதிகள் (Circuit Bangalows)
வீட்டு தங்குமிடங்கள் (Homestays) மற்றும் இது போன்ற வசதிகள்

4.2 **அனுமதி பத்திரத்தின் விடயப் பரப்பு**

பின்வரும் இடங்கள் உட்பட வளாகத்திற்குள் பின்னணி அல்லது சுற்றுபுற நோக்கங்களுக்காக இசையாக்கங்களைப் பயன்படுத்துவதை இந்த அனுமதிப் பத்திரத்தின் விடய பரப்புக்குள் அடங்குகிறது:

- விருந்தினர் அறைகள்
- நுழைவாயிற்கூடங்கள் மற்றும் வரவேற்பறை பகுதிகள்
- சிற்றுண்டிச்சாலைகள் மற்றும் சாப்பாட்டறை பகுதிகள்
- தாழ்வாரங்கள் மற்றும் பொதுப் பகுதிகள்

பின்வரும் வழிகள் மூலம் இசை வழங்கப்படலாம்:
- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புகள்
- எண்ணிம பரிமாற்றுச் (டிஜிட்டல் ஸ்ட்ரீமிங்) சேவைகள்
- களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது பௌதீக ஊடகங்கள்

4.3 **தனி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் பயன்பாடுகள்**

பின்வரும் பயன்பாடுகள் இந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் உள்ளடக்கப்படவில்லை; என்பதுடன் இவற்றிற்கு பொருந்தும் கட்டண வகையின் கீழ் தனியான அனுமதிப் பத்திரங்கள் பெறுதல் அவசியம்:

- நேரடி இசை நிகழ்ச்சிகள் (இசைக் குழுக்கள், தனிக் கலைஞர்கள் பொழுதுபோக்கு அம்சங்கள் வழங்குவோர் போன்றோர்)
- டிஜே நிகழ்ச்சிகள் அல்லது இசைச் சார்ந்த நிகழ்ச்சிகள்
- நுழைவுச்சீட்டு வழங்கப்படும் அல்லது அனுசரனை பெற்ற நிகழ்ச்சிகள்
- இசை வழங்கப்படும் விருந்துகள், கருத்தரங்குகள் மற்றும் விசேட வைபவங்கள்.

4.4 **நிறுவன வகைப்பாடு**

நிறுவனங்கள் வகைப்படுத்தலின்போது, அங்கீகரிக்கப்பட்ட விடுதித்துறை தரவரிசை அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

- 5 நட்சத்திர / உயர் ஆடம்பர விடுதிகள்
- 4 நட்சத்திர விடுதிகள் / சுற்றுலா விடுதிகள் / சமூக மண்டபங்கள்
- 3 நட்சத்திர விடுதிகள்
- 2 நட்சத்திர விடுதிகள்
- மற்றைய தங்குமிட வசதி வழங்கும் நிறுவனங்கள்

4.5 **அனுமதிப் பத்திர கட்டணங்கள்**

ஒரு அறைக்கான ஒருநாள் அனுமதிப் பத்திர கட்டணம்

நிறுவன வகை	அனுமதிப் பத்திர கட்டணம் (ரூ.)		
	மாநகர சபை பகுதி (ரூ.)	நகர சபை பகுதி (ரூ.)	பிரதேச சபை பகுதி (ரூ.)
5 நட்சத்திர / உயர் ஆடம்பர விடுதிகள்	30.00	25.00	20.00

நிறுவன வகை	அனுமதிப் பத்திர கட்டணம் (ரூ.)		
	மாநகர சபை பகுதி (ரூ.)	நகர சபை பகுதி (ரூ.)	பிரதேச சபை பகுதி (ரூ.)
4 நட்சத்திர விடுதிகள் / சுற்றுலா விடுதிகள் / கழக மண்டபங்கள்	15.00	12.00	10.00
3 நட்சத்திர விடுதிகள்	10.00	8.00	6.00
2 நட்சத்திர விடுதிகள்	5.00	4.00	3.00
மற்றவை	2.00	2.00	1.00

4.6 அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான அடிப்படை

- அனுமதிப் பத்திரமானது தனித்தனி ஒரு நிறுவனங்களுக்கு பொருந்தும்.
- அனுமதிப் பத்திரங்கள் செல்லுபடியாகும் குறைந்தபட்ச காலம் ஒரு (1) வருடமாகும்.
- மொத்தக் கட்டணம் = ஒருநாள் கட்டணம் × அறைகளின் எண்ணிக்கை × நாட்களின் எண்ணிக்கை
- மொத்த அறைகளின் எண்ணிக்கை சரியாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.
- அத்தகைய தகவல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL இடம் உள்ளது.
- பொருந்தும் சந்தர்ப்பங்களில், ACPOSL ஆல் குறைந்தபட்ச வருடாந்த அனுமதிப் பத்திர கட்டணத்தை நிர்ணயிக்கலாம்.

5. **உணவு மற்றும் பான வகைகள் வழங்கும் நிறுவனங்கள்**

5.1 பொருந்தும் நிறுவனங்கள்
இந்த வகையானது, வளாகத்திற்குள் இசையை பயன்படுத்தும் உணவு மற்றும்/அல்லது பானங்கள் வழங்கும் கீழ்க்காணும் நிறுவனங்களுக்கு பொருந்தும்:

- உணவகங்கள்
- கஃபேக்கள் மற்றும் காபி ஷொப்கள்
- மதுபானச்சாலைகள் மற்றும் பப்புகள்
- ஓய்வு விடுதிகள் மற்றும் இரவு நேர கழகங்கள்
- திடீர் உணவு கடைகள் மற்றும் உணவக நிறுவனங்கள்

5.2 **அனுமதிப் பத்திரத்தின் விடய பரப்பு**

வளாகத்திற்குள் பின்னணி அல்லது சுற்றுபுற இசை நோக்கங்களுக்காக கீழ்க்காணும் வழிமுறைகளில் இசையாக்கங்களைப் பயன்படுத்துவதை இந்த அனுமதிப் பத்திரத்தின் விடய பரப்புக்குள் அடங்குகிறது:

- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்புகள்
- எண்ணிம பரிமாற்றுச் (டிஜிட்டல் ஸ்ட்ரீமிங்) சேவைகள்
- களஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது பௌதீக ஊடகங்கள்

இந்த அனுமதிப் பத்திரம் கீழ்க்காணும் பயன்பாடுகளையும் உள்ளடக்குகிறது.

- மூன்று (3) கலைஞர்கள் வரை பங்கேற்கும் இணையம்ச நேரடி நிகழ்ச்சி
- ஒரு இசைத்தட்டு இயக்குனரால் (DJ) அல்லது இது போன்ற கலைஞர்களால் பதிவு செய்யப்பட்ட இசையை இணையம்சமாக பயன்படுத்துவது (இந்த பயன்பாடு சிறப்பு நிகழ்ச்சியாக விளம்பரப்படுத்தப்பட்டோ ஒழுங்கமைக்கப்பட்டோ இருத்தல் கூடாது).

- இந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் இசை ஓர் இணையம்ச பயன்பாடாக கருத வேண்டுமே தவிர குறித்த நிறுவனத்தின் முதன்மை அம்சமாக இருக்கக்கூடாது.
- இரவு நேர கழகங்கள், டிஸ்கோக்கள், கேசினோக்கள் மற்றும் இசையை முதன்மை அம்சமாக கொண்டுள்ள இது போன்ற நிறுவனங்கள், குறித்த நிகழ்ச்சிகள் அல்லது கச்சேரிகள் கட்டண வகைகளின் கீழ் கூடுதல் அனுமதி பத்திரங்கள் பெறுவது அவசியமாகும்.

5.3 **தனி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் பயன்பாடுகள்**

பின்வரும் பயன்பாடுகள் இந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் உள்ளடக்கப்படவில்லை என்பதுடன் இவற்றிற்கு பொருந்தும் கட்டண வகையின் கீழ் தனித் தனி அனுமதிப் பத்திரங்கள் பெறுவது அவசியம்:

- மூன்று (3) கலைஞர்களுக்கு மேலானோர் பங்கேற்கும் நேரடி நிகழ்ச்சிகள்.
- சிறப்பு நிகழ்ச்சி/வைபவம் வகையின் கீழ் வரும் டீஜே நிகழ்ச்சி அல்லது இசைப் பயன்பாடுகள்.
- நுழைவுச் சீட்டு வழங்கப்படும் அல்லது அனுசரனை பெற்ற நிகழ்ச்சிகள்

- தொணிப்பொருள் (theme) அடிப்படையிலான இரவு நேர நிகழ்ச்சிகள், சிறப்பு விளம்பர நிகழ்ச்சிகள் அல்லது நிகழ்ச்சி அடிப்படையிலான பொழுதுபோக்குகள்

5.4 **டீஜே நிகழ்ச்சி வகைப்பாடு**

ஓர் இசைத் தட்டு இயக்குனரின் (DJ) பயன்பாடு முதன்மை ஈர்ப்புக்கருவியாக விளம்பரப்படுத்தப்படும் அல்லது நடத்தப்படும் நிகழ்வொன்றை டீஜே நிகழ்ச்சியென வகைப்படுத்தலாம். நுழைவுக்கட்டணம் அறவிடல், அனுசரனை பெற்றுக்கொள்தல் அல்லது விசேட நிகழ்ச்சிகள் தயாரித்தல் போன்ற விடயங்களும் இதில் உள்ளடங்கியுள்ளன.

அத்தகைய பயன்பாடுகளுக்கு, பொருத்தமான நிகழ்வு கட்டண வகையின் கீழ் அனுமதிப் பத்திரமொன்று பெறுதல் வேண்டும்.

5.5 **அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் (வருடாந்த)**

சொத்தின் அளவு (சதுர அடி)	ஆண்டு அனுமதி பத்திரக் கட்டணம் (LKR)		
	மாநகர சபை பிரதேசம்	நகர சபை பிரதேசம்	பிரதேச சபை பிரதேசம்
2,500க்கு கீழ்	40,000.00	30,000.00	15,000.00
2,500 – 5,000	55,000.00	40,000.00	20,000.00
5,000க்கு மேல்	65,000.00	50,000.00	40,000.00

5.6 **நிகழ்வு அடிப்படையில் அனுமதிப் பத்திரங்கள் வழங்குதல் (கூடுதல்)**

அ. டீஜே நிகழ்ச்சிகள்

- ஒவ்வொரு நிகழ்ச்சி அல்லது நிகழ்வுக்கும் அனுமதிப் பத்திரம் பெறுதல் வேண்டும்.
- நிகழ்ச்சியை நடத்தும் இடத்தின் அளவு மற்றும் நிகழ்ச்சியின் தன்மையை பொருத்து கட்டணங்கள் நிர்ணயிக்கப்படலாம்.
- தேவைப்படும் சமயத்தில், அனுமதிப் பத்திரம் பெற்றவர் நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட இசையாக்கங்களின் பட்டியலொன்று ACPOSL-இடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

ஆ. நேரடி நிகழ்ச்சிகள்

- நேரடி இசை நிகழ்ச்சிகளுக்கு அனுமதிப் பத்திரம் பெறுதல் அவசியமாகும்.
- ஒவ்வொரு நிகழ்ச்சி அல்லது நிகழ்வுக்கும் அனுமதிப் பத்திரக் கட்டணம் விதிக்கப்படலாம்
- தேவைப்படும் சமயத்தில், வழங்கப்பட்ட இசையாக்கங்களின் பட்டியலொன்று அனுமதிப் பத்திரம் பெற்றவரால் அல்லது கலைஞரால் ACPOSL-இடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இ. சிறப்பு நிகழ்ச்சிகள்

- தொணிப்பொருள் (theme) இரவு நேர நிகழ்ச்சிகள், அனுசரணைப் பெற்ற நிகழ்ச்சிகள் அல்லது விளம்பர நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தும்.
- இவற்றுக்கு தனி அனுமதி பத்திரம் பெறுதல் தேவை

5.7 அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதன் அடிப்படை

- அனுமதிப் பத்திரமானது ஒரு வளாகத்திற்கு/இடத்திற்கு பொருந்தும்
- தரைப் பரப்பினை துல்லியமாக குறிப்பிடல் வேண்டும்.
- அத்தகைய தகவல்களை சரிபார்க்கும் உரிமை ACPOSL-க்கு உண்டு.
- நிகழ்ச்சிகளுக்கான அனுமதி பத்திரங்கள் நிகழ்வுக்கு முன்னதாகவே பெற்றுக்கொண்டிருத்தல் வேண்டும்

6. **நிகழ்ச்சிகள், டீஜே நிகழ்ச்சிகள் மற்றும் நேரடி நிகழ்ச்சிகள்**

6.1 **பொருந்தக்கூடிய நிகழ்ச்சிகள்**

இந்த வகையானது இசையை முதன்மையம்சமாகப் பயன்படுத்தப்படும் நிகழ்ச்சிகளுக்குப் பொருந்தும். இதனுள் அடங்குபவை:

- டீஜே நிகழ்ச்சிகள் மற்றும் இசையை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகள்.
- நேரடி இசை நிகழ்ச்சிகள் (இசைக்குழுக்கள், தனிப் பாடகர்கள்*, பொழுது போக்கு கலைஞர்கள்)
- தனிப்பட்ட மற்றும் சமூக நிகழ்ச்சிகள் (திருமண வைபவங்கள், விருந்துகள்)
- பெருநிறுவன நிகழ்ச்சிகள் மற்றும் விழாக்கள்.

6.2 **நிகழ்ச்சி வகைகள்**

- டீஜே நிகழ்ச்சிகள் – பதிவு செய்யப்பட்ட இசை முதன்மை பொழுது போக்கு வடிவமாக இருக்கும் நிகழ்ச்சிகள்
- நேரடி இசை நிகழச்சிகள் (கச்சேரி அல்லாத) – நேரடி இசைக் குழுக்கள், பாடகர்கள் அல்லது கலைஞர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகள்.
- தனிநபர் / பெருநிறுவன நிகழ்ச்சிகள் – திருமண வைபவங்கள், தனிப்பட்ட விருந்துகள் மற்றும் பெருநிறுவன விழாக்கள்.

6.3 **கொள்ளளவின்படி வகைப்பிரித்தல்**

- சிறிய: 100 நபர்களுக்குக் குறைந்த
- நடுத்தர: 100 – 300 நபர்கள்
- பெரிய : 300 நபர்களுக்கு மேல்

6.4 **அனுமதிப் பத்திரக் கட்டணங்கள்**

அனுமதி பத்திரக் கட்டணம் (LKR)			
நிகழ்ச்சி வகை	சிறிய	நடுத்தர	பெரிய
டீஜே நிகழ்ச்சி	20,000.00	30,000.00	40,000.00
நேரடி இசைநிகழ்ச்சி			
(கச்சேரி அல்லாத)	25,000.00	35,000.00	50,000.00
தனிநபர்/ பெருநிறுவன நிகழ்ச்சிகள்			
- டீஜே நிகழ்ச்சி	25,000.00	40,000.00	60,000.00
- நேரடி இசைநிகழ்ச்சி	50,000.00	75,000.00	125,000.00
- கலப்பு நிகழ்ச்சி	50,000.00	75,000.00	125,000.00

6.5 **நிகழ்ச்சி வகைப்படுத்தலைத் தீர்மானித்தல்**

ஒரு நிகழ்ச்சியானது பின்வரும் அம்சங்களையும் உள்ளடக்கி (இவற்றுக்கு மட்டும் மட்டுபடாமல்) ஒரு இசைக் கச்சேரியின் அம்சங்களையும் கொண்டுள்ள சந்தர்ப்பங்களில்,

- அதிக நுழைவுக் கட்டணம் அறவிடல்
- புகழ்பெற்ற அல்லது முன்னணி கலைஞர்களின் பங்கேற்பு
- பெரிய அளவிலான தயாரிப்பு அல்லது மேடை அமைப்பு
- முதன்மை இசை நிகழ்ச்சியொன்றாக பொது விளம்பரம் செய்தல்
- வணிகச் சிண்ண அனுசரனைப் பெற்ற நிகழ்ச்சியாக இருத்தல்

அவ்வாறான நிகழ்ச்சியொன்றிற்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் நோக்கத்திற்காக அதனை 'இசை நிகழ்ச்சி' ஆக வகைப்படுத்தும் உரிமை ACPOSL வசமுள்ளது. இவற்றுக்கு இசைக் நிகழ்ச்சி (கச்சேரியல்லாத) எனும் வகையின் கீழான கட்டணங்கள் பொருந்தும்.

அத்தைகய தீர்மானங்கள், உள்ளக மறுஆய்வு மற்றும் பொருந்தக்கூடிய சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

6.6 **அனுமதிப் பத்திரத்திற்கான நிபந்தனைகள்**

- நிகழ்ச்சி நடத்துவதற்கு முன்னர் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொண்டிருக்க வேண்டும்
- எதிர்பார்க்கப்படும் அல்லது அனுமதிக்கப்படும் அதிகபட்ச பார்வையாளர் எண்ணிக்கை அடிப்படையில் கொள்ளளவு தீர்மானிக்கப்படும்
- கொள்ளளவினை உறுதியாக தீர்மானிக்க முடியாத பட்சத்தில், நிகழ்வை வகைப்படுத்தும் உரிமையை ACPOSL கொண்டுள்ளது.
- ஏதேனும் ஒரு நிகழ்ச்சியில் பலவித இசைப் பயன்பாடுகள் அடங்கியிருந்தால், பொருந்தக்கூடிய ஆகக் கூடிய கட்டணம் பொருந்தும்
- தேவைப்படும் இடங்களில், அனுமதி பத்திரதாரர்கள் வழங்கப்பட்ட இசையாக்கங்களின் பட்டியலை ACPOSL-க்குச் சமர்ப்பித்தல் தேவைப்படலாம்.

6.7 **அனுமதிப் பத்திரங்கள் வழங்குவதன் அடிப்படை**

- அனுமதி பத்திரமானது தனி ஒரு நிகழ்ச்சிக்கு பொருந்தும்.
- ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் தனி அனுமதி பத்திரமொன்று பெறுதல் வேண்டும்
- நிகழ்ச்சியின் விபரங்களையும் நிபந்தனைகளுக்கான இணக்கத்தையும் சரிபார்க்கும் மற்றும் உறுதிப்படுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL வசமுள்ளது

7. **இசை கச்சேரிகள்**

7.1 **பொருந்தக்கூடிய நிகழ்ச்சிகள்**
இந்தக் கட்டண முறையின் கீழ் விளக்கியுள்ளவாறு, கீழ்க்காணும் இசை கச்சேரிகள் இந்த வகையின் கீழ் வரும்.

- நுழைவுச்சீட்டுகள் வழங்கப்படும் நேரடி இசை நிகழ்ச்சிகள்
- பிரபல இசைக் கச்சேரிகள் மற்றும் நிகழ்ச்சிகள்.
- ஒரு நிகழ்ச்சியின் முதன்மை ஈர்ப்புக்கருவியாக வழங்கப்படும் இசையம்சங்கள்
- இசை விழாக்கள் மற்றும் பிரம்மாண்ட இசை நிகழ்ச்சிகள்

7.2 **அனுமதிப் பத்திரத்தின் விடய பரப்பு**
பின்வருமாறு நிகழ்த்தப்படும் இசைக்கச்சேரியொன்றில் இசையாக்கங்கள் பகிரங்கமாக வழங்குதவது இவ்வனுமதி பத்திரத்தின் விடய பரப்புக்குள்ளடங்குகிறது.

- நேரடி கலைஞர்களால் (இசைக்குழுக்கள், தனிக் கலைஞர்கள், வாத்தியக் குழுக்கள்) வழங்கப்படும் அல்லது
- நேரடி மற்றும் பதிவுச் செய்யப்பட்ட இசை அங்கங்களின் எந்தவொரு கூட்டொன்றினும் மூலம் வழங்கப்படும்

7.3 **பதிவு செய்யும் மற்றும் ஒலிபரப்பும் உரிமைகள்**

நிகழ்ச்சி இடம்பெறும்போது இசையாக்கங்களை பகிரங்கமாக வழங்குவதை மட்டும் இந்த அனுமதி பத்திர வகையானது உள்ளடக்கியுள்ளது.
அத்தைகய நிகழ்ச்சிகளைப் பதிவு செய்தல், ஒளிபரப்புதல், ஸ்ட்ரீமிங் செய்தல், அல்லது ஒலி அல்லது ஒளி-ஒலி வடிவில் பரிமாற்றம் செய்தல் அல்லது விநியோகித்தல் என்பவற்றிற்கு இந்த அனுமதி பத்திரம் பொருந்தாது.
அத்தைகய எந்தவொரு பயன்பாட்டிற்கும் ACPOSL மற்றும்/அல்லது உரிமையாளர்களிடமிருந்து தனி முன் அனுமதியை பெறுதல் அவசியம்.

7.4 **அனுமதி பத்திரக் கட்டணம் (ஒரு இசையாக்கத்திற்காக)**

அனுமதி பத்திர கட்டணமானது பயன்படுத்தப்படும் தனித் தனி இசையாக்கத்தின் அடிப்படையில் கணக்கிடப்படும் என்பதுடன் ஓராக்கத்திற்கான அதிகபட்ச கட்டண விகிதம் ரூ 10,000.00 ஆகும்.

7.5 **அனுமதி பத்திரக் கட்டணத்தை நிர்ணயித்தல்**

ஓர் இசையாக்கத்திற்கான அனுமதி பத்திரக் கட்டணமானது நிகழ்ச்சியை குறித்துச் செய்யப்படும் கட்டமைக்கப்பட்ட மதிப்பீட்டொன்றின் அடிப்படையில் ACPOSL வால் நிர்ணயிக்கப்படும்.

இதன்போது பின்வரும் காரணிகள் உட்பட (இவை மட்டுமென பொருள்படாது) மற்றைய விடயங்களையும் அவதானிக்கப்படும்.

- பார்வையாளர் கொள்ளளவு
- நிகழ்ச்சி நடாத்தப்படும் இடம்
- உள்ளரங்கில் நடைபெறுகிறதா வெளியரங்கில் நடைபெறுகிறதா என்பது
- அந்நிகழ்ச்சிக்கு நுழைவுச்சீட்டு வழங்கப்படுமா இல்லையா என்பது
- நிகழ்ச்சியின் வணிக அல்லது வணிகமற்றத் தன்மை
- நிகழ்ச்சியின் அளவு மற்றும் தயாரிப்பு விலைமதிப்பு

பொருந்தக்கூடிய அனுமதி பத்திரக் கட்டணத்தை நிர்ணயிக்கும்போது, மேற்கூறிய காரணிகளின் அடிப்படையில், நோக்கத்தின் மீது எடையிடப்பட்ட கட்டண மாதிரியொன்றைப் பயன்படுத்த ACPOSL க்கு முடியும்.

7.6 **விசேட நிபந்தனைகள்**

- இசை நிகழ்ச்சிகளுக்கான அனுமதி பத்திரக் கட்டணம், நிகழ்ச்சியின்போது வழங்கப்படும் ஒவ்வொரு பாடலின் அடிப்படையில் கணக்கிடப்படும்.
- நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் நிகழ்ச்சிக்கு முன்னர் வழங்கப்படவுள்ள அனைத்து இசையாக்கங்களையும் உள்ளடக்கிய பட்டியலொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.
- தேவைப்பட்டால், நிகழ்ச்சிக்குப் பின்பும் இறுதி பட்டியலொன்றை சமர்ப்பித்தல் தேவைப்படலாம்.
- அத்தைகய பட்டியல்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL கொண்டுள்ளது.
- அனுமதி பத்திரம் வழங்கும் நோக்கத்திற்காக, வழங்கப்படும் ஒவ்வொரு இசையாக்கமும் தனி அலகாகக் கணக்கிடப்படும்.
- பாடல்கள் சிலவற்றின் சில பகுதிகளை கோர்த்து வழங்கும் – மெட்லி, பாடல்களை ஒன்றிணைத்து வழங்கும் – மாஷப், அல்லது ஒரு இசையாக்கத்தின் ஒரு பகுதியை வழங்கும் போது, பொருத்தமான இடங்களில் இவற்றை தனிவொரு இசையாக்கமாக கருதப்படலாம்.
- இந்தக் கட்டணமானது, ACPOSL-ஆல் நிர்வகிக்கப்படும் இசையாக்கங்களின் உரிமைகளுக்கு மட்டுமே பொருந்தும்.
- ஒரு இசையாக்கத்தின் உரிமைகளில் ஒரு பகுதியை மட்டுமே ACPOSL பிரதிநிதித்துவப்படுத்தும் பட்சத்தில், பொருந்தக்கூடிய அனுமதி பத்திரக் கட்டணமானது, ACPOSL-ஆல் நிர்வகிக்கப்படும் உரிமைகளின் பங்கின் அடிப்படையிலான விகிதாசாரத்தின்படி கணக்கிடப்படும்.

7.7 **இசைக் கச்சேரி வகைப்பாடு**

இந்தக் கட்டண விதிமுறைகளின் நோக்கங்களுக்காக, ஒரு நிகழ்ச்சி பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் அது ஒரு இசை நிகழ்ச்சியாக வகைப்படுத்தப்படும்:

- இசை அந்த நிகழ்ச்சியின் முதன்மை நோக்கமாக இருத்தல்; மற்றும்
- அத்தகைய நோக்கங்களுக்காகவே கலந்துக்கொள்ளும் இரசிகர்களுக்காக, இசையாக்கங்களின் ஒரு பிரத்யேக நிகழ்ச்சியாக அந்நிகழ்வை ஏற்சாபாடு செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- ஒரு நிகழ்ச்சி இசை நிகழ்ச்சியாகத் தகுதி பெறுமா என்பதைத் தீர்மானிக்கும்போது, ACPOSL பின்வரும் காரணிகளைக் கருத்தில் கொள்ளலாம்:
- நிகழ்ச்சிக்காக நுழைவுச் சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதா அல்லது பகிரங்கமாக பிரசாரப்படுத்தப்பட்டுள்ளதா என்பது
- நிகழ்ச்சியை வழங்கும் முறை மற்றும் அளவு
- பிரபல கலைஞர்களின் பங்கேற்றல் அல்லது கட்டமைக்கப்பட்ட நிகழ்ச்சி தயாரிப்பொன்று உள்ளதா என்பது
- அந்த நிகழ்ச்சி ஒட்டுமொத்தமாக இசையை மையமாகக் கொண்ட ஒரு நிகழ்ச்சியாக வழங்கப்பட்டுள்ளதா என்பது.

7.8 **வகைப்பாட்டைத் தீர்மானித்தல்**

எந்தெவாரு நிகழ்ச்சியினும் தன்மை, அளவு மற்றும் பண்புகளின் அடிப்படையில் அதன் வகைப்பாட்டைத் தீர்மானிக்கும் உரிமையை ACPOSL கொண்டுள்ளது. எனவே, அனுமதி பத்திரம் வழங்கும் நோக்கங்களுக்காக அத்தைகய தீர்மானங்கள் இறுதிமுடிவாக கருதப்பட வேண்டும்.

7.9 **அனுமதி பத்திரம் வழங்குவதன் நோக்கம்**

- அனுமதி பத்திரம் தனி ஒரு நிகழ்ச்சிக்காக பொருந்தும்.
- ஒவ்வொரு இசை நிகழ்ச்சிக்கும் தனி அனுமதி பத்திரம் பெறுதல் தேவைப்படும்
- குறித்த நிகழ்ச்சி நடத்துவதற்கு முன் அனுமதி பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்

8. **சேவைச்சார் நிறுவனங்கள்**

8.1 பொருந்தக்கூடிய நிறுவனங்கள்
இந்த வகை, சேவைச் சார்ந்த அல்லது வணிகச் சூழல்களில் பின்னணி அல்லது சுற்றுபுற நோக்கங்களுக்காக இசை பயன்படுத்தப்படும் நிறுவனங்களுக்குப் பொருந்தும், அவற்றுள் அடங்குபவை:

- தேகாரோக்கிய கழகங்கள், உடற்பயிற்சி நிலையங்கள் மற்றும் உடல்நல மையங்கள்
- மருத்துவனைகள், சிகிச்சை நிலையங்கள் மற்றும் மருத்துவப் பயிற்சி நிலையங்கள்
- அழகு நிலையங்கள் மற்றும் ஆரோக்கிய மையங்கள்
- எரிபொருள் நிலையங்கள் மற்றும் சேவை மையங்கள்
- ஓய்வுக்கூடவசதிகள் மற்றும் வாடிக்கையாளர் சேவை வசதிகள் வழங்கும் நிலையங்கள்
- பிரதான வணிகச் செயல்பாட்டிற்கு இணையாக இசையை பயன்படுத்தப்படும் , அதனையொத்த நிறுவனங்கள்.

8.2 **அனுமதி பத்திரத்தின் விடயப் பரப்பு**

இந்த அனுமதிப் பத்திரம், வளாகத்திற்குள் பின்னணி அல்லது சுற்றுபுற நோக்கங்களுக்காக மட்டும் இசையாக்கங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது, அவற்றுள் அடங்குபவை:

- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புகள்
- எண்ணிம பரிமாற்றம் (டிஜிட்டல் ஸ்ட்ரீமிங்) சேவைகள்
- கழஞ்சியப்படுத்தப்பட்ட அல்லது பௌதிக ஊடகங்கள்

இங்கு இசை, முதன்மை ஈர்ப்புகருவியாகவோ பொழுது போக்கு அம்சமாகவோ அமைதல் கூடாது.

8.3 **தனி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் பயன்பாடுகள்**

பின்வரும் பயன்பாடுகள் இந்த அனுமதி பத்திரத்தின் கீழ் அடங்குவதில்லை. எனவே அவற்றுக்காக பொருந்தக்கூடிய கட்டண வகையின் கீழ் தனி அனுமதி பத்திரமொன்று பெறுதல் வேண்டும்:

- நேரடி நிகழ்ச்சிகள் (இசைக்குழுக்கள், தனி கலைஞர்கள், பொழுது போக்கு கலைஞர்கள்)
- டீஜே நிகழ்ச்சிகள் அல்லது இசையை மையமாகக் கொண்ட நிகழ்ச்சிகள்
- இசை உள்ளடக்கிய அனுசரனை அல்லது விளம்பர நிகழ்ச்சிகள்
- நுழைவுச்சீட்டு தேவைப்படும் அல்லது பொது நிகழ்ச்சிகள்

8.4 **அனுமதி பத்திரக் கட்டணங்கள் (ஆண்டுக்கு)**

வளாகத்தின் அளவு (சதுர அடி)	அனுமதி பத்திரக் கட்டணம் (LKR)		
	மாநகர சபை பகுதி	நகர சபை பகுதி	பிரதேச சபை பகுதி
5,000-க்குக் கீழ்	10,000.00	8,000.00	5,000.00
5,000 – 10,000	25,000.00	15,000.00	10,000.00
10,000-க்கு மேல்	35/= ஒரு சதுர அடிக்கு	25/= ஒரு சதுர அடிக்கு	15/= ஒரு சதுர அடிக்கு

8.5 **அனுமதி பத்திரம் வழங்குவதற்கான அடிப்படை**

- அனுமதிப் பத்திரம் தனி ஒரு வளாகத்திற்கு/இடத்திற்கு பொருந்தும்
- அனுமதிப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்கும் போது தரை பரப்பு துல்லியமாக குறிப்பிடப்படல் வேண்டும்
- அத்தைகய தகவல்கள் சரிபார்க்கும் உரிமை ACPOSL-இடம் உள்ளது

9. **பொது இடங்கள் மற்றும் காத்திருப்பு வசதிகள் உள்ள இடங்கள்**

9.1 **பொருந்தக்கூடிய இடங்கள்**

இந்த வகை, சுற்றுப்புற அல்லது பின்னணி இசைக்காக இசை பயன்படுத்தப்படும் பொது மற்றும் பகுதிப் பொது இடங்களுக்குப் பொருந்தும்.
அவற்றுள் அடங்குபவை:

- விமான நிலையங்கள்
- புகையிரத நிலையங்கள்
- பேருந்து நிலையங்கள் மற்றும் முனையங்கள்
- இடையிலுள்ள ஓய்வறைகள் மற்றும் காத்திருப்புச்சாலைகள்.
- அதிவேக நெடுஞ்சாலை சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கும் நிலையங்கள்.
- இதையொத்த எதேனும் காத்திருப்பு அல்லது இடையிலுள்ள ஓய்வு இடங்கள்

9.2 **அனுமதி பத்திரத்தின் விடயப் பரப்பு**

இந்த அனுமதி பத்திரம், மேற்கூறிய இடங்களில் பின்வரும் முறைகள் உட்பட்ட முறைகளில் பின்னணி அல்லது சுற்றுபுற நோக்கங்களுக்காக இசையாக்கங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்குகிறது.

- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒளிபரப்புகள்
- டிஜிட்டல் ஸ்ட்ரீமிங் சேவைகள்
- களஞ்சியப் படுத்தப்பட்ட அல்லது பௌதீக ஊடகங்கள்
- பொது அறிவிப்பு அமைப்புகள் (PA systems) மற்றும் காட்சி திரை அமைப்புகள் (display panels)

இங்கு, இசை முதன்மை ஈர்ப்புக்கருவியாகவோ பொழுது போக்கு அம்சமாகவோ அமைந்திருக்கக் கூடாது.

9.3 **தனி அனுமதிப் பத்திரம் பெறுதல் தேவைப்படும் பயன்பாடுகள்**

பின்வரும் பயன்பாடுகள் இந்த அனுமதி பத்திரத்தின் விடய பரப்பினுள் அடங்காது. எனவே பொருந்தக்கூடிய கட்டண வகையின் கீழ் வேறொரு அனுமதிப் பத்திரம் பெற வேண்டும்:

- நேரடி நிகழ்ச்சிகள் (இசைக்குழுக்கள், தனிக் கலைஞர்கள், பொழுது போக்கு கலைஞர்கள்)
- டீஜே நிகழ்ச்சிகள் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட இசைநிகழ்ச்சிகள்
- இசை உள்ளடக்கிய, அனுசரணை அல்லது விளம்பர நிகழ்ச்சிகள்
- நுழைவுச்சீட்டு தேவைப்படும் அல்லது பொது பொழுது போக்கு நிகழ்ச்சிகள்

9.4 **அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் (வருடாந்த)**

இடம்	அனுமதிப் பத்திரக் கட்டணம் (ரூ)		
	மாநகர சபை பகுதி	நகர சபை பகுதி	பிரதேச சபை பகுதி
விமான நிலையங்கள்	500,000.00	500,000.00	500,000.00
புகையிரத நிலையங்கள்	15,000.00	10,000.00	7,500.00
பேரூந்து நிலையங்கள்	15,000.00	10,000.00	7,500.00
அதிவேக நெடுஞ்சாலை சேவை நிலையங்கள்	50,000.00	30,000.00	20,000.00

9.5**அனுமதிப் பத்திரத்திங்கள் வழங்கும் அடிப்படை**

- அனுமதிப் பத்திரம் தனி ஒரு வளாகத்துக்கு/இடத்திற்கு பொருந்தும்
- வளாகத்திற்குப் பொறுப்பான முகாமையாளர் அல்லது அதிகாரி குழுமங்களினால் அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
- இசையாக்கங்களின் பயன்பாட்டையும் நிபந்தனைகளுக்கான இணக்கத்தையும் சரிபார்க்கும் மற்றும் உறுதிப்படுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL வசமுள்ளது

10. **போக்குவரத்து சேவைகள்**

10.1 **பொருந்தக்கூடிய போக்குவரத்து சேவை வகைகள்**

வாகனங்கள் அல்லது போக்குவரத்து அமைப்புகளில், பொதுமக்களுக்கு இசையாக்கங்களை வழங்கும் பின்வரும் போக்குவரத்து சேவைகளுக்கு இந்த வகையானது பொருத்தமாக இருக்கும்.

- வானூர்திகள் (இலங்கைக்குள் இயங்கும் உள்நாட்டு மற்றும் சர்வதேச சேவைகள்)
- பயணிகள் புகையிரதங்கள் மற்றும் புகையிரத சேவைகள்.
- பயணிகள் பேருந்துகள் மற்றும் கோச்கள் மற்றும் சுற்றுலா போக்குவரத்து வாகனங்கள்
- உல்லாசக் கப்பல்கள், கடல் கப்பல்கள் மற்றும் அதனையொத்த போக்குவரத்து சேவைகள்
- வாகனத்தில் ஒலி அல்லது பொழுது போக்கு அமைப்புகள் மூலம் இசை வழங்கும் வேறு போக்குவரத்து சேவைகள்.

10.2 **அனுமதி பத்திரத்தின் விடயப் பரப்பு**

இந்த அனுமதிப் பத்திரம், போக்கு வரத்து அமைப்புகள் பயணிகளின் பொழுது போக்கிற்காக பின்வரும் முறைகள் உட்பட இசையாக்கங்களைப் பயன்படுத்துவதை உள்ளடக்கியது:

- வானொலி மற்றும் தொலைக்காட்சி ஒலிபரப்புகள்
- டிஜிட்டல் ஸ்ட்ரீமிங் அல்லது பயணத்தின்போது பயன்படுத்தப்படும் பொழுது போக்கு அமைப்புகள்
- களஞ்சியப் படுத்தப்பட்ட அல்லது பௌதீக ஊடகங்கள்

இங்கு இசையானது போக்குவரத்துச் சேவைக்கு இணையங்கமாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அது முதன்மை நோக்கமாக இருத்தல் கூடாது.

10.3 **தனி அனுமதிப் பத்திரம் தேவைப்படும் பயன்பாடுகள்**

பின்வரும் பயன்பாடுகள் இந்த அனுமதிப் பத்திரத்தின் கீழ் வராது என்பதுடன் பொருந்தக்கூடிய கட்டண வகையின் கீழ் தனி அனுமதிப் பத்திரமொன்று பெற்றுக்கொள்ளல் வேண்டும்:

- வாகனத்தில் வழங்கப்படும் நேரடி நிகழ்ச்சிகள்
- டீஜே நிகழ்ச்சிகள் அல்லது ஏற்பாடு செய்யப்பட்ட பொழுது போக்கு நிகழ்ச்சிகள்
- இசை உள்ளடக்கிய அனுசரணை பெற்ற அல்லது விளம்பர நிகழ்ச்சிகள்
- போக்குவரத்து சேவைக்கு மேலதிகமாக நடத்தப்படும், நுழைவுச்சீட்டு வழங்கப்படும் பொழுது போக்கு நிகழ்ச்சிகள்

10.4 அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் (வருடாந்த)

போக்குவரத்து வடிவம்	அலகு	அனுமதிப் பத்திரக் கட்டணம் (LKR) ரூ.
விமானம்	ஒரு விமானத்திற்கு	500,000.00
உல்லாசக் கப்பல்கள்/ கடல் கப்பல்கள்	ஒரு கப்பலுக்கு	1,000,000.00
பயணிகள் புகையிரதங்கள்	ஒரு பாதைக்கு	50,000.00
பயணிகள் பேருந்துகள்/ கோச்கள்	ஒரு வாகனத்திற்கு	2,500.00

10.5 **அனுமதிப் பத்திரங்கள் வழங்கும் அடிப்படை**

- அனுமதிப் பத்திரம், குறிப்பாக குறிப்பிட்டுள்ளதன் படி தனி ஒரு வாகனத்திற்கு, கப்பலுக்கு அல்லது சேவைக்கு மட்டும் பொருந்தும்.
- குறித்த இயக்குபவர் அல்லது சேவை வழங்குநரால் அனுமதிப் பத்திரம் பெற்றுக்கள்ளப்பட வேண்டும்
- இசையாக்கங்களின் பயன்பாட்டையும் நிபந்தனைகளுக்கான இணக்கத்தையும் சரிபார்க்கும் மற்றும் உறுதிப்படுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL வசமுள்ளது

11. **செயற்கைக்கோள், கேபில் மற்றும் எண்ணிம (டிஜிட்டல்) பரப்பு சேவைகள்**

11.1 **பொருந்தக்கூடிய சேவைகள்**

இந்த வகை, பொது மக்களுக்கு ஒலி-ஒளி நிகழ்ச்சி-உள்ளடக்கல்களை விநியோகிக்கும் சேவைகளை வழங்கும் பின்வரும் நிறுவனங்களுக்குப் பொருந்தும்.

- செயற்கைக்கோள் தொலைக்காட்சி சேவை வழங்குநர்கள்
- கேபில் தொலைக்காட்சி இயக்குநர்கள்
- IPTV மற்றும் எண்ணிம (டிஜிட்டல்) தொலைக்காட்சி தளங்கள்
- இதையொத்த வேறு ஏதேனும் ஒலி-ஒளி நிகழ்ச்சி-உள்ளடக்கல்களை விநியோகம் செய்யும் சேவைகள்

11.2 **அனுமதி பத்திரத்தின் விடயப் பரப்பு**

தொலைக்காட்சி நிகழ்ச்சி-உள்ளடக்கங்களை இறுதிப் பயனாளர்களுக்கு பரிமாற்றம் செய்தல் அல்லது விநியோகிக்கும் அமைப்புகள் ஊடாக இசையாக்கங்களை பொது மக்களுக்கு வழங்குதல் இந்த அனுமதிப் பத்திரத்தின் விடயப் பரப்புக்குள் அடங்குகின்றது.

அத்தகைய அமைப்புகளால் வழங்கப்படும் தொலைக்காட்சி அலைவரிசைகள், நிகழ்ச்சிகள் மற்றும் அதனை சார்ந்த நிகழ்ச்சி-உள்ளடக்கங்களில் இடம்பெறும் இசையாக்கங்களை ஒளிபரப்புவதும் இதனுள் அடங்கும்.

11.3 **விடய பரப்பின் எல்லைகள்**

தனி அனுமதி பத்திரச் சட்டத்தின் கீழ் வருவதும் குறித்த சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளினால் சீர்ப்படுத்தப்படுவதுமான முதன்மை ஒளிபரப்பு சேவைகளுக்கு இப்பகுதி பொருத்தமற்றதாகும்.

11.4 **கூடுதல் உரிமைகள் தேவைப்படும் பயன்பாடுகள்**

இசையாக்கங்களின் சில பயன்பாடுகளில், ஒத்திசைவு உரிமைகள், தயாரிப்பு உரிமைகள் அல்லது வேறு வடிவங்களில் உள்ள உரிமைகள் உட்பட, ACPOSL-ஆல் நிர்வகிக்கப்படாத உரிமைகள் அடங்கலாம்.

இதன்படி, பொருந்தக்கூடிய இடங்களில், வெளியீட்டாளர்கள், தயாரிப்பாளர்கள் அல்லது வேறு அங்கீகரிக்கப்பட்ட தரப்பினர்கள் உட்பட, குறித்த உரிமைதாரர்களிடமிருந்து பயனாளர்கள் கூடுதல் அனுமதிப் பத்திரங்கள் அல்லது அனுமதிகளை பெறுதல் தேவைப்படலாம்.

பின்வருவன இதனுள் அடங்கும் போதும் இவை மட்டும் அடங்குமென பொருட்படாது.

- தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், திரைப்படங்கள் அல்லது விளம்பரங்களில் இசையாக்கங்களின் பயன்பாடு
- மைய இசை அல்லது பிரத்யேகமாக உருவாக்கப்பட்ட ஆக்கங்களின் பயன்பாடு
- காட்சி உள்ளடக்கத்துடன் இசையை ஒத்திசைக்கும் ஏதேனும் பயன்பாடு

11.5 **அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் (வருடாந்த)**

வகை	அனுமதிப் பத்திரக் கட்டணம் (LKR)
செயற்கைக்கோள் / கேபில் / IPTV இயக்குவோர்	500,000.00

11.6 **அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கான அடிப்படை**

- அனுமதிப் பத்திரம் தனித் தனி இயக்குபவர் அல்லது சேவை வழங்குநருக்கு பொருந்தும்.
- ஒவ்வொரு அமைப்புக்கு அல்லது சேவைக்கு தனித் தனி அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- இசையாக்கங்களின் பயன்பாட்டையும் நிபந்தனைகளுக்கான இணக்கத்தையும் சரிபார்க்கும் மற்றும் உறுதிப்படுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL வசமுள்ளது

12. நிவாரண மற்றும் விசேட அனுமதிப் பத்திரங்கள்

12.1 பொருந்தக்கூடிய வகைகள்

வணிக நோக்கமற்ற அல்லது சமூகத்திற்கு சாதகமான நோக்கங்களுக்காக இசையாக்கங்களை பயன்படுத்தும் பின்வரும் வகைகளுக்குப் பொருந்தும்.

• பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்கள்
• கல்வி நிறுவனங்கள் (பள்ளிகள், பல்கலைக்கழகங்கள், பயிற்சி நிறுவனங்கள்)
• சமய நிறுவனங்கள் (விஹாரைகள், கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் மற்றும் இதுபோன்ற அமைப்புகள்)
• சமூக மற்றும் கலாச்சார அமைப்புகள்
• அரசு அல்லது நகராட்சி நிறுவனங்களின் சமூக நலன்புரி நிகழ்ச்சிகள்

12.2 **தகுதி பெறுவதற்கான நிபந்தனைகள்**

நிவாரண அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் பின்வரும் தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

- உரிய சட்டங்களின் கீழ் சட்டபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டிருத்தல் அல்லது அங்கீகரிக்கப்பட்டிருத்தல்.
- இசையின் பயன்பாடு அதன் இயல்பிலேயே வணிக நோக்கமற்றது என்பதை உறுதிபடுத்தல்.
- இதன்மூலம் பெறகூடிய வருமானம் ஏதும் இருப்பின் அதனை தொண்டு, கல்வி, சமய அல்லது சமூக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் என்பதை உறுதி செய்தல்.
- ACPOSL ஆல் கேட்கப்படும் அனைத்து ஆதார ஆவணங்களையும் சமர்ப்பித்தல்.

12.3 **அனுமதிப் பத்திரத்தின் விடயப் பரப்பு**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகுதி பெறுவதற்கான நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நிகழ்ச்சிகளில் அல்லது செயற்பாடுகளில் இசையாக்கங்களைப் பயன்படுத்துவதற்கு இந்த அனுமதிப் பத்திரம் பொருந்தும்.

இந்தப் பிரிவின் கீழ் தெளிவாகக் கூறப்பட்டிருக்கவில்லையெனில், அந்நிழ்ச்சியோடு தொடர்புடைய கட்டண வகைகளின் அனைத்து நிபந்தனைகளும் தொடர்ந்தும் பொருந்தும்.

12.4 **நிவாரணக் கட்டணங்கள்**

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்குப் பின்வருமாறு குறைக்கப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணங்கள் வழங்கப்படலாம்:

- தொண்டு நிறுவனங்கள் – 50% வரை கட்டணக் குறைப்பு
- கல்வி நிறுவனங்கள் – 25% வரை கட்டணக் குறைப்பு
- சமய / கலாச்சார அமைப்புகள் – 25% வரை கட்டணக் குறைப்பு

குறித்த நிகழ்ச்சி அல்லது பயன்பாட்டின் தன்மை, அளவு மற்றும் நோக்கத்தின் அடிப்படையில் வழங்கப்படும் துல்லியமான கட்டண குறைப்பு ACPOSL-ஆல் தீர்மானிக்கப்படும்.

12.5 **வரம்புகள்**

பின்வரும் சந்தர்ப்பங்களில் நிவாரணக் கட்டணங்கள் பொருந்தாது:

- நிகழ்ச்சி அல்லது செயற்பாடு இயல்பாகவே வணிக ரீதியான நோக்கம் கொண்டதாக இருக்கும் போது
- நிகழ்ச்சிக்காக அனுசரனை பெற்றுள்ள போது அல்லது அது வர்த்தகச் சின்ன விளம்பரத்தில் ஈடுபட்டுள்ள போது
- இலாபம் ஈட்டும் நோக்கத்தில் நுழைவுக் கட்டணங்கள் அல்லது வேறு கட்டணங்கள் அறவிடும் போது
- இசையின் பயன்பாடு ஒரு வணிக ரீதியான பொழுது போக்குச் சேவையின் பகுதியாக இருக்கும் போது

12.6 **தீர்மானம் செய்தலும் அங்கீகரித்தலும்**

நிவாரண அனுமதிப் பத்திரத்திற்கான அனைத்து விண்ணப்பங்களும் ACPOSL-இன் மதிப்பாய்வுக்கும் அங்கீகரித்தலுக்கும் கீழ்ப்பட வேண்டும்.

நோக்க அளவுகோல்களின் அடிப்படையில் நிவாரணக் கட்டணங்களை வழங்கும், நிராகரிக்கும் அல்லது மாற்றியமைக்கும் உரிமையை ACPOSL வசமுள்ளது.

12.7 **அனுமதிப் பத்திரம் வழங்குவதன் நோக்கம்**

- நிவாரண அனுமதிப் பத்திரங்கள் பொருத்தத்தின் படி, தனி ஒரு நிகழ்ச்சிக்கு அல்லது பயன்பாட்டிற்குப் பொருந்தும்.
- இசையாக்கங்களைப் பயன்படுத்துவதற்கு முன்னர் விண்ணப்பதாரர்கள் அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும்.
- தகுதிகளையும் நிபந்தனைகளுக்கு இணங்க செயற்படுவதையும் சரிபார்க்கும் மற்றும் உறுதிபடுத்திக்கொள்ளும் உரிமை ACPOSL வசமுள்ளது